<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>
<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>
<u>MCOP . No. 157/2024</u>

**<u>நாள் : 13.08.2026</u>**

**ம.சா.** 2 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பாஸ்கரன் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு. ரவீந்திரன் | வயது | : | 40 |
| ஊர் | : | திருப்பத்தூர் | தொழில் | : | மருத்துவர் |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணி புரிந்து வருகிறேன். அழைப்பாணை கிடைக்கப்பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மனுதாரர் ஹரிகிருஷ்ணன், வயது 48, த/பெ தேவராஜ் என்பவரை பரிசோதனை செய்து 2% ஊனச்சான்றிதழ் திருப்பத்தூர் மருத்துவ குழு வழங்கியுள்ளது என்றால் சரிதான். தலையில் அடிப்பட்ட காரணத்தினால் மயக்கம் வருவதற்கு வாய்ப்பு உண்டா என்றால் இல்லை. கண் பார்வை பாதிக்க வாய்ப்புள்ளதா என்றால் விபத்து ஏற்பட்டவுடன் CT Scan எடுக்கப்பட்டுள்ளது, அதில் கண்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று குறிப்பு உள்ளது. வேலூர் அரசு மருத்துவமனை குழுவுக்கு பரிந்துரை செய்யப்பட்டதா

என்றால் சிகிச்சையில் இருந்த காலத்திலே சொற்பகாயம் என்பதால் விடுவிக்கப்பட்டார்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென்று கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.